[4th August 1966

திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்: பெரிய தேவலாயங்களில் தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி முதலிய பாசுரங்கள் ஓதுகின்ற ஓதுவாமூர்த்திகளுக்குக் கொடுக்கின்ற சம்பளம் மிகவும் குறைவாக இருக்கின்றது. அதை உயர்த்துவதற்கு அரசாங்கம் ஏதாவது வழிவகை காணுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அரசாங்கம் நேரடியாக வழிவகை காண முடியாது. ஆனால், அற நிலைய இலாக்காவினர் இதைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள்.

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம்.

*65 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்தில் சம்பிரதாயத்திற்கு விரோதமாக நிர்வாக அதிகாரியால் டிரஸ்டிகள் நியமிக்கப்பட்டுள்ளதாகப் புகார் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) No.

(*b*) Does not arise.

துப்பாக்கிப் பிரயோகம் பற்றிய விதிமுறைகள்.

*66 **கேள்வி.—திரு. செ. மாதவன்:** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மக்கள் கிளர்ச்சி செய்யும்போது துப்பாக்கிப் பிரயோகம் செய்வதுபற்றிய விதி முறைகளை மாற்றியமைக்கும் உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No.

திரு. செ. மாதவன்: இந்த விதிமுறைகளை மாற்றுவதற்கு புதிய தொகுப்பு ஒன்றைச் சென்னையிலுள்ள கமிஷனர் வெளியிட்டது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ? வெளியிடுவதற்கு முன்னால் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி பெறப் பட்டதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கமிஷனர் அவர்கள், தன்னுடைய அனுபவத்தையொட்டி, சொந்த அபிப்பிராயத்தைத் தான் தெரிவித்தார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டிய நிமித்தம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன்: துப்பாக்கிப் பிரயோகம் செய்கின்றபோது, முதல் தடவையாகப் பயமுறுத்துவதற்காகச் சுடப் படுகிற முறையும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறதா ? அல்லது, எடுத்த எடுப்பிலேயே கொல்லுவதற்கு என்ற முறை மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா ?